[1972 மார்ச் 15

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : பொதுவான குற்றச்சாட்டு எப்படி வேண்டுமானுலும் சுமத்தலாம். அதற்கு எப்படிப் பதில் சொல்வது? குறிப்பாக ஏதாவது தவறு ஏற்பட்டிருக்கிறது என்று சொன்னுல் பதில் சொல்லலாம்.

தமிழ் நாட்டில் உள்ள நீரூற்றுகள்

* 518. **வினு—திரு. என். கிட்டப்பா :** *மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா—*

தமிழ் நாட்டில் உள்ள நீர் ஊற்றுகளைக் கண்டுபிடிக்க நடவடிக்கை ஏதேனும் மேற்கொள்ளப்படுள்ளதா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : ஆம்.

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, இத்தகைய நீரூற்றுகள் தஞ்சை மாவட்டத்தில் குறிப்பாக கீழ்த் தஞ்சையில் இதற்கு முன்னுல் சிலயிடங்களில் கண்டுபிடிக்கப்பட்டு தகுந்த பலன்களை அளித்து வருகிறது. அந்த நீரூற்றுகள் மூலம் ஆண்டு முழுவதும் தண்ணீர் கிடைத்து பாசன வசதிக்கு மிகவும் உபயோகமாக அமைந்து வருகிறது. அத்தகைய நீரூற்றுகளை மேலும் அதிகமாகக் கண்டுபிடித்து பாசன வசதிகளைப் பெருக்குவதற்கு மேலும் முயற்சிகளைச் செய்ய அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : பாசன வசதிக்கான நீரூற்றுகள் விவசாய இலாக்கா மூலம் செய்யப்படுகிறது. ஏற்கெனவே விவசாய இலாக்கா இதுபோன்ற நீரூற்றுகளைக் கண்டுபிடித்து இன்னும் அதிகமாகச் செய்ய ஏற்பாடு நடைபெற்று வருகிறது.

திரு. சோ. அழகர்சாமி : நீரூற்றுகளைக் கண்டுபிடிப்பதில், நெல்லை மாவட்டத்திலுள்ள சங்கரன்கோவில், கோவில்பட்டி, தாலுகாக்களில் எங்கெங்கே கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றன? அப்படி இல்லை என்ருல் இனிமேலாவது அந்த மாதிரி ஒரு ஏற்பாட்டை அந்தப் பகுதியில் செய்வதற்கு அரசு முயற்சிக்குமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தமிழ்நாடு முழுவதும் நீர் ஆராய்ச்சிகள் நடத்துவதற்காகத்தான் 'டயரக்டர் ஆப் கிரவுண்ட் வாட்டர்' நியமிக்கப்பட்டிருக்கிருர். அந்த டைரக்டர் மூலம் நடவடிக்கை எடுக்கப்படும்.

1972 மார்ச் 15]

திரு. கா. வேழவேந்தன் : இந்த நீரூற்றுகளைக் கண்டுபிடிக்க டைரக்டர் ஆப் கிரவுண்ட் வாட்டர் நியமிக்கப்பட்டிருப்பதாகச் சொன்னார்கள். அந்த வேலை எல்லா மாவட்டங்களிலும் முடிந்து விட்டதா? அபபடி முடிந்திருக்குமானால் எங்கெங்கு நீரூற்றுகள் மூலம் தண்ணீர் கிடைக்கிறது என்ற செய்தியை வரைப படங்களாக எழுதி அப்படிப்பட்ட வரைப் படங்களை எல்லா பஞ்சாயத்து ஒன்றிய அலுவலகங்களிலும் வைத்து விவசாயிகளுக்குத் தெரிவிக்கும் வகையில் வெளியிட அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தமிழ்நாடு முழுவதிலும் இன்னும் முடியவில்லை. முடிந்த பிறகு உறுப்பினர் அவர்களின் யோசனை பரிசீலிக்கப்படும்.

Tube well organisation

* 519 *Q.*—THIRU A. SWAMIDHAS: Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(*a*) whether any tube well organisation is functioning in this State; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) & (இ) குழாய்க் கிணறு அமைப்பு நிறுவனம் என்று தனியாக எதுமில்லை. ஆனால், கீழ்க்கண்ட நிறுவனங்கள் இம் மாநிலத்தில் நிலநீர் ஆய்வில் ஈடுபட்டுள்ளன—

1. **தமிழ்நாடு அரசுத் துறைகள் :**

(அ) நிலநீர் இயக்குத்துறை;

(ஆ) வேளாண்மைத்துறை;

(இ) பொதுநலப் பொறியியல்துறை; மற்றும்

(ஈ) நெடுஞ்சாலைக் கிராமப் பணித்துறை.

2. **இந்திய அரசு :** மத்திய நிலநீர் வாரியம்.

3. **உலக நாடுகள் நிறுவனம் :** ஐக்கிய நாடுகள் வளர்ச்சித் திட்ட நிலநீர் திட்டம் :

இது தமிழ்நாடு அரசின் கீழ் செயல்படுகிறது.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : யுனிசெப் நிறுவனத்தின் மூலம் எவ்வளவு உதவி பெறுகிறது? மத்திய அரசிலிருந்து எவ்வளவு உதவி பெறுகிறது? இது சம்பந்தமாக இதுகாறும் எவ்வளவு ரூபாய் செலவு செய்யப்பட்டிருக்கிறது?